சென்னை, ஆலந்தூர், ஏ.ஜே.எஸ்.நிதி மேல்நிலைப் பள்ளியில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் கோடை விடுமுறைக்கு பின்னர் பள்ளிக்கு வருகை புரிந்த மாணவச் செல்வங்களுக்கு பாட நோட்டுப் புத்தகங்கள் வழங்கி, 2'ஆம் கட்ட ஆதார் பதிவு முகாமைத் தொடங்கி வைத்து சிறப்பித்தார்கள். தொடர்ந்து பள்ளி தொடக்க நாளிலேயே அஞ்சலக சேமிப்பு கணக்கு எண் தொடங்கும் திட்டத்தையும் தொடங்கி வைத்து சிறப்பித்தார்கள். இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித்துறை அரசு செயலாளர் குமரகுருபரன், பள்ளிக் கல்வித் துறை இயக்குனர் முனைவர் அறிவொளி, தொடக்கக்கல்வி இயக்குநர் கண்ணப்பன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (10.06.2024) சென்னை, சைதாப்பேட்டை, மாந்தோப்பு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவிகளுக்கு ஆதார் பதிவு, விலையில்லா பாடப்புத்தகங்கள், அஞ்சலக வங்கி கணக்கு எண் ஆகிய சேவைகள் மாணவிகள் பயன்பெறும் வகையில் துவக்கி வைத்து விழா பேருரையாற்றினார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (கல்வி) திருமதி. ஷரண்யா அறி, மண்டலக்குழுத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் ஸ்ரீதர், மோகன்குமார், சுப்பிரமணி மற்றும் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் உடனிருந்தனர்.

பள்ளி சீருடை வழங்கும் திட்டம் குறித்த ஆய்வுக் கூட்டம்!

அமைச்சர் ஆர்.காந்தி தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜூன் 11

கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர். காந்தி அவர்கள் தலைமையில் பள்ளி சீருடை வழங்கும் திட்டம் மற்றும் இதர திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தான ஆய்வு கூட்டம் தலைமைச் செயலகத்தில் 07.06.2024 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 2024-2025-ஆம் ஆண்டிற்கு சமூக நலத் துறைக்கு விநியோகிக்கப்பட வேண்டிய இரண்டு இணை, பள்ளி சீருடை துணிகள் விநியோக முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார். மேலும் கடந்த ஆண்டு சட்டமன்ற பேரவை அறிவிப்புகள் மீதான தொடர் நடவடிக்கை மற்றும் நிறைவேற்றப்பட வேண்டிய அறிவிப்புகள் மற்றும் திட்டங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்தும், துணிநூல் துறையில் செயல்படுத்தப்படும் சிறிய அளவிலான ஜவுளி பூங்காக்கள் மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ள ஜவுளி நகரம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது:-

2024-2025-ஆம் ஆண்டிற்கு சமூக நலத் துறைக்கு விநியோகிக்கப்பட வேண்டிய 237.36 இலட்சம் மீட்டர் துணிகளில் நாளது தேதி வரையில் 149.65 இலட்சம் மீட்டர் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. சமூக நலத் துறைக்கு தினசரி துணிகள் விநியோகம் செய்யப்படும் அளவினை அதிகரித்து எதிர் வரும் 20.06.2024க்குள் இரண்டு இணைக்கான துணிகள் முழுமையாக வழங்கப்படும்.

பொங்கல் 2025க்கான வேட்டி, சேலை வழங்கும் திட்டத்திற்காக, சேலைகள் மற்றும் வேட்டிகளின் மாதிரியினை உற்பத்தி செய்து அதன் முழுவிலை பட்டியல் விவரத்துடன் அரசுக்கு அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசின் திட்டங்கள் குறித்த நேரத்தில் மக்களை சென்றடையும் வகையில் நடவடிக்கைகள் மற்றும் பணிகளை விரைந்து மேற்கொள்ளுமாறு துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இவ்வாய்வுக் கூட்டத்தில் தர்மேந்திர பிரதாப் யாதவ், அரசு முதன்மை செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை, இரா.ஆனந்தகுமார், மேலாண்மை இயக்குனர், கோஆப்டெக்ஸ், மா.வள்ளலார், துணிநூல் ஆணையர் மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

களக்காடி எல்லப்பன் தலைமை! எம்.கிருஷ்ணமூர்த்தி - இரா.துரைராஜ் முன்னிலை

சைதை மேற்கில் - அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு தங்க நாணயம்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்!

சென்னை, ஜூன் 11

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 101 வது பிறந்த தினத்தை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம், சைதை மேற்குப் பகுதிக் கழகம் சார்பில் பகுதி அவைத் தலைவர் களக்காடி எல்லப்பன் ஏற்பாட்டில், 139 வது வட்டம், ஜாபர்கான்பேட்டை சென்னை உயர்நிலைப் பள்ளியில் 10 ஆம் வகுப்புத் தேர்வில் 500க்கு 400க்கு மேல் மதிப் பெண் பெற்ற மாணவ மாணவியர்களுக்கு ஒரு கிராம் தங்க நாணயம் வழங்கும் விழா 21.06.2024 வெள்ளிக்கிழமை அன்று காலை 10 மணிக்கு பள்ளி வளாகம், ஜாபர்கான்பேட்டையில் நடைபெறுகின்றது.

விழாவிற்கு பகுதி அவைத் தலைவர் களக்காடி எல்லப்பன் தலைமை வகிக்கிறார். சைதை மேற்கு பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, சைதை கிழக்குப் பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ், சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் ஸ்ரீதரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சைதை த.சம்பத், வி.பி. ஜானகிராமன், ஆர். ரமேஷ், கவிதா கௌதமன், வழக்கறிஞர் ப.சுப்பிரமணி, சைதை சாதிக், அட்கோ கமலநாதன், சை.மு.சேகர், ஜி.கே. ராமச்சந்திரன் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

மாணவ மாணவியர்களுக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், 10 ஆம் வகுப்புத் தேர்வில் 500க்கு 400க்கு மேல் மதிப் பெண் பெற்ற ஒவ்வொரு மாணவ மாணவியர்களுக்கும் தலா ஒரு கிராம் தங்க நாணயம் வழங்குகிறார்.

இதில் தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி., துணை மேயர் மு.மகேஷ் குமார், எஸ்.குணசேகரன், சைதை சம்பத், மின்னல் கந்தப்பன், தா.மோகன்குமார், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, ஆர். கிருஷ்ணகுமார், நா.மணி கண்டன், எம்.எஸ்.ஹரி பாபு, கோ.பாஸ்கர், அஞ்சல் ராமன், வீ.மதிவாணன், டி.என்.சிவமணி, கிண்டி ஆர்.எல்.செல்வம், கு.புகழ்வேந்தன், பொன். ஜெய்சிங், பால்காரர் ஏ.ரவி, சைதை ஆர்.ரவி, ஜி.பாபு, மு.கதிரவன், பொ.பரத்குமார், பி.எஸ். முருகன், சாந்தி, சுந்தரம், அ.அயாத்பாஷா, இ.வரதன், மா.வரதன், மா.ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ், சுமதி தீனதயாளன், பூபதி வெங்கடேசன், சைதை த.மணி, சைதை எல்.சந்திரன், சி.டி.காசிநாதன், து.முரளி, வி.சபரி, அ.சுப்பிரமணி, ஜி.ஏழுமலை, கொடி சுரேண், டி.கோபாலகிருஷ்ணன், எஸ்.முகமதுஅலி, என்.ராஜேஷ், மு.காளியப்பன், நியூ காலனி சம்பத், வி.பி.சிவக்குமார், பி.ஆசைத்தம்பி, ஆயில் சரவணன், சி.ஆறுமுகம், எஸ்.மல்லிகா, சி.மங்கையர் திலகம், து.வினோத், க.அருண், ஜிம்.க.பிரபு, ம.சுகுமார், இரா.சத்யா, பி.டி.சி.ரவி, சி. ராஜா, ம.திலிப்பன், ஜெ.கதிரவன், சி.வி.பிரவின், காரைக்குடி செல்வம், தெ. கொரியகுமார், ஜெ. கெவின், ஆர். தண்டபாணி, சு.நித்தியானந்தம், ஜி.கங்காதரன், வி.ஐ.பி. ஆர்.சுரேஷ், சு.சுகுமாறன், மாவுமில் வெங்கடேசன், ஆர்.அருண், வ.இளங்கோ, சார்பு சரவணன், வி.விஜயகுமார், ஜெ.ரவிச்சந்திரன், சைதை பாஸ்கர், மு. அஜிம், மு. குணா, கா.மூர்த்தி, ஆர்.மைக்கேல், சென்டிரிங் குமார், எ.ஜி.எஸ்.ராஜேந்திரன், பில்டர் பி.பழனி, பூ.பாஸ்கர், அ. நெடுஞ்செழியன், சலூன் எஸ்.ரவி, பிரைட் சந்திரன், க.குபேந்திரன், எஸ்.குணசேகர், பி.தினகரன், சுதாகர், பி.ஜெயசீலன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

எ.பாபு நன்றி கூறுகிறார். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை சைதை மேற்கு பகுதிக் கழக அவைத்தலைவர் களக்காடி எல்லப்பன் செய்துள்ளார்.

ஆர்.ரமேஷ் தலைமை ! ஜே.ஜே.எபினேசர் முன்னிலை !

39 (அ) வட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் ! நலஉதவிகள்!

ஆர்.டி.சேகர் கலாநிதி வீராசாமி வழங்குகின்றனர் !

சென்னை, ஜூன் 11 -

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 39(அ) வட்ட கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா பிறந்த நாள் விழா மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (11.6.2024 செவ்வாய்க்கிழமை) மாலை 6.00 மணியளவில் நம்மையா மேஸ்திரி தெரு, புதுவண்ணாரப்பேட்டை செ.81ல் நடைபெறுகிறது.

மாவட்ட பிரதிநிதி ஆர். ரமேஷ் தலைமை வகிக்கிறார்.ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, பகுதி செயலாளர் இரா.லட்சுமணன், வட்ட செயலாளர் தா.வ.மு.கஜேந்திரன், க.தேவி எம்.சி, க. ராஜேஸ்வரி, வி.முத்து, இ. ஆறுமுகம், எஸ்.பி.எஸ்.புத்தன், இ.கார்த்திக், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கே.அடைக்கலம், கே.சரவணன், ஆர்.ரங்கநாதன், எஸ்.சுரேஷ்குமார், டி.ஆனந்த், ஆர்.அருள், எ.எம்.இளங்கோவன், ஆர். வெங்கட், எம்.சுரேஷ்குமார், எஸ்.தாமரைச்செல்வி, பாம்பே லட்சுமி, எம்.இலக்கிய, வி.எ. பாப்பா ஆறுமுகம், டி.லெனின், ஏ.அருள், எம்.தயாளன், ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்குகின்றனர்.

இதில் பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், மண்டலக்குழுத்தலைவர் நேதாஜி யு.கணேசன், இரா. மதிவாணன், ஆர்.வெற்றிவீரன், வே.சிவக்குமார், நாகம்மை கருப்பையா, பி.டி. பாண்டிச்செல்வம், ந.மனோகரன், இர.பொன்இளவரசன், இரா.நரேந்திரன், கு.நற்குணம், என்.மருதுகணேஷ், வெ.சு.சத்தியநாராயணன், ப. சோமசுந்தரமூர்த்தி, பி.சதிஷ் குமார், என்.அனிபா, கே. பாலு, ஆர்.டி.ராஜா, எம். வேதலட்சுமி, கே.பி.சதிஷ்குமார், சி.மணிகண்டன், ஏ.டி. மணி, எஸ்.எம்.பரசுராமன், கேப்டன்.சங்கர், என்.எம்.கதிரேசன், நா.கோதண்டன், மா.நாகராஜன், ப.குமார், ச.தமிழ்செல்வன், பொ.து. ராஜா, வி.வடிவேலு, குமாரி நாகராஜன் எம்.சி, பவித்ரா நரேஷ்குமார் எம்.சி, எம்.எம். சாமி, பி.அன்பழகன், பி. கே.மூர்த்தி, கே.மோகன், ஜெ.சுரேஷ்பாபு, டி.ஆர்.தணிகாச்சலம், எஸ்.திருப்பதிசாமி, மா.ரூபசங்கர், மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள. எ. டில்லிராஜன், பி.அனிதா, ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

மு.மாணிக்கவேலன் தலைமை!

திருவொற்றியூர் 3வது வட்டத்தில் அறுசுவை உணவு வழங்கல்!

தி.மு. தனியரசு - வை.ம.அருள்தாசன் பங்கேற்பு!

சென்னை, ஜூன் 11-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மாவட்ட கழக செயலாளர் மாதாவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி ஆகியோரின் ஆலோசனையின் பேரில் 3-வது வட்ட கழக செயலாளர் மு.மாணிக்கவேலன் ஏற்பாட்டில் 9.6.24 அன்று அன்னை சிவகாமி நகர் மதியம் 12.00 மணியளவில் 1 வது மண்டல குழு தலைவரும் கிழக்கு பகுதி கழக செயலாளருமான தி.மு.தனியரசு எம்.சி, மற்றும் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக செயலாளர் ஆகியோர் பங்கேற்று முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மாலை அணிவித்து விண்ணை முட்டும் வரையில் கலைஞரின் புகழ் ஓங்குக என்று முழக்கமிட்டனர்.

அதனைத் தொடர்ந்து 1-வது மண்டல குழு தலைவரும் கிழக்கு பகுதி கழக செயலாளருமான தி.மு தனியரசு எம்.சி, திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் ஆகியோர் பொதுமக்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் 500 பேருக்கு அசைவ விருந்து அளித்து இனிப்பு மாங்கனிகள் போன்றவை வழங்கி சிறப்பாக கொண்டாடினர்.

இந்நிகழ்வில் மேற்கு பகுதி கழக துணை செயலாளர் இ. குமரவேல், கிழக்கு பகுதி கழக துணை செயலாளர் எம். வி. குமார், 7-வது வட்ட கழக செயலாளர் கார்த்திகேயன், மாவட்ட பிரதிநிதி ந.ராம்குமார், வட்டக் கழக நிர்வாகிகள் வி.கே.ஏழுமலை, ஏ. புண்ணியமூர்த்தி, ஆர்.மணிமாறன், ஏ.ராஜேந்திரன், வீ.தனபால், ஏ. ஜோபெர்னாண்டஸ் மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட, கழக நிர்வாகிகள், சார்பு நிர்வாகி கள், மகளிர் அணியினர், பாக முகவர்கள், மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கழக உடன்பிறப்புகள் என திரளானோர் பங்கேற்றனர்.

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பள்ளிப்பட்டு ஆர்கே பேட்டை திருத்தணி ஒன்றியம் திருத்தணி நகரம் பொதட்டூர்பேட்டை உள்பட பல்வேறு பகுதியிலிருந்து பொதுமக்களின் கோரிக்கையான சாலை வசதி குடிநீர் வசதி கால்வாய் வசதி மற்றும் ஊராட்சி மன்ற அலுவலகப் புதுப்பித்தல் மற்றும் பல்வேறு பணிகள் மேற்கொள்ள வேண்டும் என திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ மாவட்ட ஆட்சியர் டாக்டர் பிரபு சங்கரிடம் கோரிக்கை மனு வழங்கினார். உடன் மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளனர்.

4 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 26.01.1936

மறைவு 11.06.2020

முன்னாள் கழக தொழிலாளரணி செயலாளர்
முன்னாள் பொது செயலாளர் தமிழ்நாடு மின் கழக தொமுச
சிங்கார. இரத்தினசபாபதி M.A.,

இன்று எங்களை விட்டு பிரிந்த நாள்

முத்தமிழ் அறிஞர் கலைஞர் வகுத்த பாதையில்
அயராது உழைத்த உழைப்பாளரே
கழகத் தலைவர் தளபதியின் உறுதுணையோடு
கழகத் தொழிலாளர் அணிச் செயலாளராக
தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின்
பொதுச் செயலாளராக தொழிலாளர் வாழ்வு சிறக்க
பாடுப்பட்ட பாதுகாவலரே மலர்கள் உதிர்ந்தாலும் வாசம் மறையாது
நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள் அகலாது

என்றும் தங்கள் நினைவில்

என்றும் தலைவர் கலைஞர் வழியில்,
என்றென்றும் கழக தலைவர், தமிழக முதல்வர் அவர்களின் நிழலில்
செந்தில்நாதன் இரத்தினசபாபதி BE.,MBA.,
மற்றும் குடும்பத்தினர்கள்